**Case No. CC. No. 84/2022, Dated: 17.03.2026**

**PW-9- குமார் செல்வம் (CMP.No.251/2026-ன் படி மனு அனுமதியின் பெயரில் குறுக்கு விசாரணை)**

**(சத்தியபிரமாணம் திரு. E. கோவிந்தராஜ், Grade III Bench Clerk of this court அவர்களால் செய்யப்பட்டது).**

**(விசாரணை தொடங்கப்பட்ட நேரம் 11.24.A.M):-**

**1-ம் எதிரி ஆஜர். (2 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. 2 மற்றும் 3 எதிரிகளுக்காக பிரிவு 355 of BNSS Act-ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. கூர்மையான கல்லால் ஒருவரின் முதுகில் ஓங்கி அடிக்கும்போது அடிபட்ட இடத்தில் இரத்தக்காயம், இரத்தக்கட்டு ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான். அ.சா.1-ன் அ.சா.ஆ.8 ஆவணத்தில் மேற்கண்ட இரத்தகாயம், இரத்தக்கட்டு இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.4-ன் அ.சா.ஆ.6 ஆவணத்தில் முதுகிலும், இடுப்பிலும், காயங்கள் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கூர்மையான கல்லால் முதுகிலும், இடுப்பிலும் குத்தியிருந்தால் இரத்தக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

2. அ.சா.1 மற்றும் அ.சா.4-ற்கு தலையில் அடிப்பட்டதாக அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.4-ன் வயிற்று பகுதியில் சிராய்ப்பு தான் இருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குத்து காயம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விறகு கட்டையை கொண்டு உடம்பில் எந்த பகுதியில் அடித்தாலும் அடிபட்ட இடத்தில் இரத்தக்கட்டு அல்லது அடிபட்டதற்கான காய அடையாளம் இருக்கும் என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.4 மற்றும் அ.சா.6 ஆகியோர் பரிசோதனைக்கு

வந்தபோது உடல் முழுவதும் கட்டையால் அடித்தற்கான காய அடையாளங்களோ, இரத்தக்கட்டோ இருந்ததாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. அ.சா.4 மருத்துவத்திற்கு வந்தபோது கூர்மையான பொருளால் வயிற்றில் குத்தியதாக மருத்தவரிடம் சொல்லியுள்ளதாக விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் அதுபோன்று என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. அ.சா.6–ற்கு வழங்கப்பட்ட காயச்சான்றிதழில் குறிப்பிட்ட காயங்களை தவிர இரத்தக்கட்டோ அல்லது காயம் பட்ட அடையாளமோ இருப்பதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**<u>(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.32.A.M):–</u>**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.03.17 11:35:45 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.